**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE QUARRY UNIT OF M/s R. PURUSHOTHAMAN ROUGH STONE QUARRY AT S.F. NO. 420/1 (PART-6), VINNAMANGALAM VILLAGE, AMBUR TALUK, TIRUPATHUR DISTRICT ON 11.07.2025 AT 01.15 PM IN M/s ASHOK MAHAL, M.C ROAD, CHENNAI – BANGALORE NATIONAL HIGHWAY, ALANKUPPAM VILLAGE, AMBUR TALUK, TIRUPAHUR DISTRICT.**

**Present:**

| | |
|---|---|
| 1. **Tmt. J. Ajitha begum** | : Revenue Divisional Officer, Vaniyambadi, Tirupathur District. |
| 2. **Thiru.Er. C. Tholkappiyan** | : District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board Vaniyambadi, Tirupathur District |

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi.**

At the outset, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi has welcomed the Revenue Divisional Officer, other Government officials, NGOs, Environmentalists and all the Public present in the public hearing meeting. He briefed the project proposal of Rough Stone Quarry proposed at Vinnamangalam Village, Ambur Taluk ,Tirupathur District explaining that the above projects falls under the 'B1' Category under Schedule 1A of Environment Impact Assessment (EIA) vide Notification No. S.O 1533 dated 14.09.2006 issued by the Ministry of Environment, Forest and Climate Change as they forms a cluster of more than 5 Hectares area and therefore it is necessary to conduct public hearing meeting to obtain Environmental Clearance for the quarry project from the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai.

Then DEE, TNPCB requested the Sub-Divisional Magistrate/Revenue Divisional officer, Vaniyambadi to preside over and conduct the public hearing meeting. RDO welcomed all and has informed that she was deputed by the District Collector, Tirupathur District to preside over the meeting on behalf of the District

administration and explained the procedure to be adopted during the meeting and commenced the meeting.

Subsequently, District Environmental Engineer, Vaniyambadi, Tirupathur District has requested the project consultant to present the proposed project details one by one and requested the public & NGOs and others gathered in the meeting Hall to give their opinion, concerns, clarification after the presentation.

**Technical Presentation, M.Vijayaragavan, Environmental Consultant, GeoTechnical Mining Solution, Dharmapuri**

The Project Consultant, Geo Technical Mining Solution, Dharmapuri on behalf of Project proponent of the quarry has presented the details of the project of M/s R Janardhanan Rough Stone Quarry through power point presentation.

He explained that stone quarry of by M/s R. Purushothaman Rough Stone Quarry at S.F. NO. 420/1 (PART-6)at an extent of 0.81.0 Hectare of Vinnamangalam Village, Ambur Taluk,Tirupathur District. He also informed that Press release for the public hearing meeting to this quarry was already published in Daily English and Tamil Newspapers ("Deccan Chronicle" and "Daily Thanthi" respectively) was published on 07.06.2025after getting the approval of the District Collector, Tirupathur for conducting public hearing meeting on 11.07.2025 at 01.15 Pm. He also detailed the impact on Environment due to the project and Environment manage plan, requirement of man power, etc.,

**District Environmental Engineer,TNPCB, Vaniyambadi, Tirupathur District.**

After completion of the presentation, District Environmental Engineer has requested the public to introduce themselves with their name and village before speaking to express their suggestions, concerns and clarifications about this project and also assured that their views will be recorded both Audio & video and will be submitted to the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai for further consideration for the issue of Environmental clearance.

## Thiru.Sethuraman, Palar Protection Movement

He says that,

- "Quarries have promised to plant 405 trees in the quarry premises. This must be enforced and noise and air pollution from quarries cause major health impacts.
    - In Survey No.445 (East) a house is located within 210 m.
    - In Survey No.447 (Southeast) a house is located within 255 m.
    - In Survey No.449 (Southeast) two houses are located within 245 m.
    - In Survey No.420/1 (Part-6) is located nearby Residential area.
- M/s R. Purushothaman Rough Stone Quarry is located near residential area and hence I oppose the upcoming project of Purushothaman Quarry".

## Thiru.Pitchamani, Vinnamangalam

He says that,

- " There are no water issues or related impacts from the existing and proposed quarries. We are not facing any problems from the quarry. Therefore we are supporting for the proposed quarry".

## Thiru.Nagarajan, Vaniyambadi

He says that,

- "The hill doesn't belong to one village alone.Quarrying operation causes noise, water, and ground water pollution and also no need for a public hearing and we do not want the proposed quarry.
- Wildlife animals will be affected during the blasting in quarry which causes noise pollution and there's risk of groundwater depletion. Therefore, no public hearing for quarry should be allowed".

## Thiru.Dharani, NaamTamilarKatchi, Vaniyambadi

He says that,

- "All the existing quarries are not operating as per the government rules and villages, houses and farm lands around quarries will get affected due to the operation of proposed quarry.
- It will take millions of years for a hill to form and Hills are crucial for fertile farm land. Hence "Naam Tamilar Katchi" will never accept newly proposed quarries and will protest against quarry establishment".

## Thiru.Venkatesh, Vinnamangalam

He says that,

- "Government grants permission for quarries and it can provide solution for the problems arising from the quarries. If you oppose quarries, how will built houses without stone jelly. Many existing houses are located within 300 m of the proposed quarries thereby violating the regulations. Let's find a balanced solution for the future generations and the environment.
- Therefore public consultation is conducted ".

## Thiru.Mugilan,Sennimalai, Environmental Protection Movement

Regarding M/s. Purushothaman Quarry Thiru.Mugilan says that the quarry is located at survey No. 420/1 (Part-6) and here the meeting is not conducted for voting purpose to decide what's right or wrong. According to map, following survey numbers are located within 300 m radius and is mentioned below

  - In Survey No. 448 (East Direction of the proposed quarry) a house is located within 250 meter from the proposed quarry.
  - In Survey No. 447 (SoutheastDirection of the proposed quarry) a house is located within 290 meter from the proposed quarry.
  - In Survey No. 449 (Southeast Direction of the proposed quarry) a house is located within 295 meter from the proposed quarry.

- Houses are located within 300 meter radius from the proposed quarry and it is seems from Google Maps confirms
  - In East direction, houses located 291 m from the proposed quarry
  - In South-east direction, a house is located 233 m from the proposed quarry
  - In South-east direction houses are located at 299 m from the proposed quarry
  - In South-East direction houses were located 292 m from the proposed quarry
  - In Eastern direction a house is located 233 m from the proposed quarry.

**Thiru.Vijayaprabakaran, Vinnamangalam**

He says that

- They are only talking about the benefits of the 5 quarries that are already in operation. They are not discussing about the negative impacts.
- People are saying that the existing 5 quarries have not caused any harm. But we need to think and speak about what will happen to our future generations if 6 more quarries are approved making it a total of 12 or 13 quarries.

**Thiru. Krishnan, Vinnamangalam**

He says that,

- "The upcoming quarry will not cause any harm to the villagers and all the villagers supports the proposed the quarry project. There is no water problem issue from the quarrying activities. Jelly is much affordable price for small house builders in Kattukollai and Kamiyanpettai Pudur because of these quarries /stone crushers which are located nearer to the village and the hollow blocks are sold at reduced rates.Only controlled blasting is done and no noise is heard".

**Thiru.Soundararajan, Kennadikuppam (Former District Councilor)**

He says that,

- "Quarries are operating efficiently and there are no negative impacts from the existing and proposed quarries. We need the quarry and the Locals are living peacefully without any issues".

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Vaniyambadi, Tirupathur District**.

District Environmental Engineer finally thanked the Revenue Divisional Officer and all the public and NGOs who have participated in the public hearing meeting and the meeting came to an end.

- In Eastern direction a house is located 285 m from the proposed quarry.

- Many houses are located very nearer to the proposed M/s.Purushothaman stone Quarry.
- Due to the above said reasons I oppose the proposal of the M/s.Purushothaman quarry".

How can quarries be permitted where houses are already exist?

- M/s.Purushothaman Quarry for 4 acres 800 trees should be planted.However, none of the 05 existing / 06 proposed quarries have developed green belt with the native species and also no fencing was provided around the proposed quarry premises.
- Sand must be imported from abroad and no new quarries should be allowed. Further, 15 MT of sand should be imported to replace 5 MT locally.
- Hon'ble Supreme Court order stated that weight limits must be enforced by the quarry. However, Trucks are carrying 20 tons of stone from the quarry where only 10 tons are allowed on village roads. Hence action must be taken against the quarries for violating the rules. Fencing must be provided to protect people and animals from the quarrying area.
- Only controlled (Nanal) blasting should be allowed which has 25-second interval between consecutive blasts. Quarrying activities will causes severe air pollution.
- Illegal quarries must be penalized. Permits must comply with law and violations should result in imprisonment". Hence i oppose the upcoming quarry project".

**<u>Thiru.Muthamizan, Vinnamangalam</u>**

He says that,

- "People of the villages around the proposed quarry area (Kattukollai, Vinnamangalam, Kennadikuppam, Rangapuram, NacharKuppam, Periyangkuppam) supports the proposed project and only the outsiders are opposing it .The needs of the local people must be addressed".

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Daily Newspaper Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing (Total pages 15 & 117 persons)
3. Copy of Audio & Video (DVD – Disc 1& Pen drive) of the public hearing proceedings.

24/07/2025

District Environmental Engineer,
TamilNadu Pollution Control Board,
Vaniyambadi, Tirupathur District.

24/07/25

Revenue Divisional Officer,
Vaniyambadi,
Tirupathur District.

**திருப்பத்தூர் மாவட்டம். ஆம்பூர் வட்டம், விண்ணமங்கலம் கிராமம், ச.எண்.420/1 (பிரிவு–6) 0.81.0 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. R. புருஷோத்தமன் கல் குவாரி. நிறுவனத்தின் திட்ட பணிக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் 11.07.2025 பிற்பகல் 01.15 மணி மணியளவில் தி/ள். அசோக் மஹால், M.C. ரோடு, சென்னை–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை, ஆலங்குப்பம் கிராமம், ஆம்பூர் வட்டம், திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை விபரம்:**

**பங்கேற்றோர்:**

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. J. அஜிதா பேகம் | வருவாய் கோட்டாட்சியர், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் |
| 2. | Er. சி. தொல்காப்பியன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் |

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி**

வருகை புரிந்துள்ள வருவாய் கோட்டாட்சியர் / (Sub Divisional Magistrate), வாணியம்பாடி அவர்களை வரவேற்று,

திருப்பத்தூர் மாவட்டம். ஆம்பூர் வட்டம், விண்ணமங்கலம் கிராமம், அரசு புறம்போக்கு நிலத்தில் ச.எண்.420/1 (பிரிவு–6) 0.81.0 ஹெக்டர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். R. புருஷோத்தமன் கல் குவாரியை இயக்குவதற்கு மாநில சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுசூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் இன்று நடைபெற உள்ளது. சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை

2006ன் படி 5.00 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேல் கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூகநல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய் மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் தி/ள். R. புருஷோத்தமன் கல் குவாரி நிறுவனத்திற்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். அசோக் மஹாலில் 11.07.2025 அன்று பிற்பகல் 01.15 மணியளவில் நடைபெறுமென டெக்கான் குரோனிகல் மற்றும் தினத்தந்தி செய்திதாள்களில் 07.06.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவித்துக்கொள்ளலாம் என கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்திற்கு மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் / (Sub Divisional Magistrate), வாணியம்பாடி அவர்களை தலைமையேற்று நடத்தி தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டார்.

**தொழில்நுட்ப விளக்க வல்லுநர்,** எம்.விஜயராகவன், சுற்றுச்சூழல் ஆலோசகர், ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொல்யூஷன், தர்மபுரி, தி/ள். R. புருஷோத்தமன் கல் குவாரி திட்டம் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி</u>**

பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம். தங்களுடைய கருத்துகளை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொண்டார்.

**திரு. சேதுராமன், பாலாறு பாதுகாப்பு இயக்கம்**

- 405 மரங்கள் நடப்படும் என்று திட்ட விளக்கத்தில் உறுதி அளித்திருக்கிறார்கள். அதனை கடைபிடிக்க வேண்டும். மேலும் கல் குவாரியிலிருந்து நாள்தோறும் வெளியேறும் சத்தம் மற்றும் மாசு கலந்த காற்றால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுத்தும்,
- புல எண்.445 (கிழக்கு) – 210 மீட்டரில் வீடு உள்ளது,
- புல எண்.447 (தென் கிழக்கு) – 255 மீட்டரில் வீடு உள்ளது.
- புல எண்.449 (தென் கிழக்கு) – 245 மீட்டரில் 2 வீடுகள் உள்ளது,
- புல எண்.420/1 (Part 6) குடியிருப்புவாசிகள் இருக்கும் இடத்தில் அமைய உள்ள புருஷோத்தமன் கல் குவாரிக்கு எதிர்ப்பு தெரிவித்துக்கொள்கிறேன்,

**திரு. பிச்சமணி, விண்ணமங்கலம்**

- வரப்போகும் குவாரியால் எவ்வித தண்ணீர் பிரச்சினையும் பாதிப்பும் இல்லை,
- குவாரியால் எந்த பிரச்சினையும் எங்களுக்கு இல்லை. குவாரி வேண்டும்.

**திரு. நாகராஜன், வாணியம்பாடி**

- குவாரிகள் அமைய உள்ள இடம் ஒரு கிராமத்திற்கு மட்டும் சொந்தமில்லை,
- இந்த குவாரி அமைவதால் ஒலி மாசு, நீர் மாசு, நிலத்தடி நீர் பாதிப்பு பாதிப்பு ஏற்படும்.எனவே கருத்துக்கணிப்பு வேண்டாம், கல் குவாரி வேண்டாம்.
- குவாரி இயங்கும் போது ஏற்படும் சத்தத்தால் வனவிலங்குகள் இடம் பெயரும், மேலும் இந்த குவாரி இயங்குவதால் ஒலி மாசு ஏற்படும். நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்படும் என்று கூறுகிறீர்கள். எனவே மாசு ஏற்படும் குவாரிகளுக்கு கருத்துக் கணிப்பு கூட்டம் வேண்டாம். கல் குவாரியும் வேண்டாம்.

**திரு. தரணி, நாம் தமிழர் கட்சி, வாணியம்பாடி**

- ஏற்கனவே செயல்பட்டு கொண்டு இருக்கும் குவாரிகள் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படவில்லை,
- வரப்போகும் குவாரியை சுற்றி உள்ள பகுதியில் கிராமங்கள், மக்கள் வீடுகள், விவசாய நிலம் இருக்கிறது. இதனால் பாதிப்பு ஏற்படும்.
- ஒரு மலை உருவாக ஒரு மில்லியன் வருடம் தேவைப்படுகிறது.
- நாம் தமிழர் கட்சி இந்த கல் குவாரி அமைய ஒரு போதும் ஒத்துக்கொள்ள மாட்டாது.
- மலை இல்லையென்றால் விவசாய நிலங்கள் செழிக்காது.
- கல் குவாரி அமைந்தால் நாம் தமிழர் கட்சி போராட்டம், ஆர்ப்பாட்டம் முன் எடுப்போம் என்கின்றனர்.

**திரு. வெங்கடேஷ், விண்ணமங்கலம்**

- கல் குவாரி இயங்க அரசு அனுமதி கொடுக்கிறது இதனால் அரசாலேயே இதற்கு தீர்வு கொடுக்கும்.
- குவாரி வேண்டாமென்று சொன்னால் எப்படி வீடு கட்டுவது.
- இவ்வளவு வீடுகள்/தற்காலிகமாக குறிப்பாக 300 மீட்டர் தொலைவில் இருக்க கூடாது, ஆக விதிகளை மீறி கல் குவாரிகள் அமைய உள்ளன.
- அவர்களுடைய சந்ததிகளுக்கு வீடு கட்டுவது, பொருளாதார வளர்ச்சி முன்னேற உதவுவது போன்றவற்றை சூழ்நிலைக்கு ஏற்றவாறு சரி எது தவறு எது என ஆராய்ந்து அதற்கான தீர்வு காண வேண்டும்.
- அதற்காக தான் கருத்துக்கணிப்பு கூட்டம் நடத்தப்படுகிறது.

**<u>திரு. முகிலன், சென்னிமலை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் – புருஷோத்தமன் கல் குவாரி தொடர்பாக கீழ்கண்டவாறு கூறினார்.</u>**

- ஒட்டு எடுப்பு நடத்தவில்லை சரி எது தவறு எது என விவாதிக்க,
- புல எண். (420/1Part6) கல் குவாரி அமைய உள்ளது.

- எனினும் புல வரைபடத்தில் கீழ்கண்டவாறு உள்ளது.
- புல எண்.448 (கிழக்கு) – 250 மீட்டரில் வீடு உள்ளது,
- புல எண்.447 (தென் கிழக்கு) – 290 மீட்டரில் வீடு உள்ளது,
- புல எண்.449 (தென் கிழக்கு) – 295 மீட்டரில் வீடு உள்ளது,
- அனைத்தும் Google வரைபடத்தில் இருக்கிறது.
- கிழக்கு – 291 மீட்டரில் வீடு உள்ளது.
- தென் கிழக்கு – 233 மீட்டர்
- தென் கிழக்கு – 299 மீட்டர் (பல வீடுகள்)
- தென் கிழக்கு – 292 மீட்டர் (வீடுகள்)
- கிழக்கு – 233 மீட்டர் (வீடு)
- கிழக்கு – 285 மீட்டர் (வீடு)
- பல வீடுகள் புருஷோத்தமன் குவாரிக்கு அருகில் 300 மீட்டருக்குள் இருக்கின்றன. எனவே இக்குவாரி அமைய எதிர்ப்பு தெரிவிக்கிறேன்.
- மேற்கண்ட புல எண்கள் மற்றும் வீடுகள் google வரைபடத்தில் இருக்கின்றன,
- வீடுகள் இருக்கின்ற இடத்தில் எவ்வாறு குவாரிகள் அமைக்கப்படும்,
- விதிகளை மீறி இவ்விரண்டு குவாரிகளும் இருக்கின்றன.
- 200 மரங்கள் 1 ஏக்கருக்கு நடவேண்டும் . 4 ஏக்கருக்கு பரந்தாமன் கல் குவாரியில் 800 மரங்கள் நட வேண்டும்.
- ஏற்கனவே செயல்படும் 5 குவாரிகள் மற்றும் செயல்பட உள்ள 6 குவாரிகளால் பசுமை அரண் அமைக்கப்படவில்லை, நாட்டு மரங்கள் நடப்படவில்லை,
- கல் குவாரிகளில் கம்பி வேலி இல்லை.
- குவாரிகள் அமைக்க கூடாது. 5 MT மணலுக்கு பதிலாக 15 MT மணல் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டும்.
- லாரிகளில் 20 டன் எடை எடுத்து வரப்படுகிறது. ஆனால் கிராம சாலைகளில் மாண்புமிகு உச்சநீதி மன்ற தீர்ப்பின்படி கிராம பகுதிகளில் 10 டன் மட்டுமே எடுத்து செல்ல வேண்டும்.

- கிராம சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் அரசு அனுமதிக்கப்பட்ட எடை தான் எடுத்து செல்ல வேண்டுமென்று உச்ச நீதிமன்றமே கூறியிருக்கிறது.
- விதிகளை மீறும் குவாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கம்பி வேலி அமைத்து மக்கள் விலங்குகள் பாதிக்காமல் இருக்க அரசு உறுதி செய்ய வேண்டும்.
- குவாரிகளில் நாணல் வெடிகளை தான் வெடிக்க வேண்டும்.
- குவாரிகளால் மிக பெரிய காற்று மாசு ஏற்படுகிறது.
- சட்ட விரோதமாக அனுமதிக்கப்பட்ட குவாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த குவாரிகள் சட்டத்திற்கு மீறி அமைய உள்ளதால் சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது. மீறினால் சிறை தண்டனை உறுதி.

**திரு. முத்தமிழன், விண்ணமங்கலம்**

- குவாரியின் சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமங்களாகிய காட்டுக்கொல்லை, விண்ணமங்கலம், கென்னடிகுப்பம், ரங்காபுரம், நாச்சார் குப்பம், பெரியாங்குப்பம் ஊர் பொதுமக்கள் குவாரி வேண்டும் என விரும்புகிறார்கள்,
- வெளி கிராம மக்கள் மட்டுமே எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.
- குவாரி அருகில் உள்ள பொதுமக்களுக்கு எது தேவையோ அதை செய்ய வேண்டும்.

**திரு. விஜயபிரபாகரன், விண்ணமங்கலம்**

- ஏற்கனவே இயங்கி கொண்டு இருக்கும் 5 குவாரிகளின் நன்மைகள் பற்றி மட்டுமே பேசுகிறார்கள். தீமைகளை பற்றி பேசவில்லை,
- ஏற்கனவே இருக்கும் 5 குவாரிகளால் பாதிப்பு இல்லை என்று மக்கள் பேசுகிறார்கள். ஆனால் வரப்போகும் 6 குவாரிகள், மொத்தம் 12–13 குவாரிகள் வந்தால் நம்முடைய சந்ததி என்னாகும் என யோசித்து பேச வேண்டும்.

**திரு. கிருஷ்ணன், விண்ணமங்கலம்**

- வரப்போகும் குவாரியால் எந்த பாதிப்பும் இல்லை.
- ஊர்பொதுமக்கள் எல்லாம் குவாரி வேண்டும் என்கிறார்கள்.
- குவாரி வருவதால் தண்ணீர் பிரச்சினை எதுவும் இல்லை. காட்டுக்கொல்லை, கம்மியம்பட்டு புதூர் பகுதியில் சிறு வீடு கட்டுவோருக்கு ஜல்லியானது குறைந்த விலையில் கிடைக்கிறது.
- Hollow Blockம் விலை குறைத்து தருகிறார்கள், நாணல் வெடி மட்டுமே பயன்படுத்தி குவாரியில் வெடித்து வருகிறார்கள், எந்த சத்தமும் வருவதில்லை.

**திரு. சௌந்தராஜன், கென்னடிகுப்பம் (முன்னாள் மாவட்ட கவுன்சிலர்)**

- குவாரிகள் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. இந்த கல் குவாரி அமைவதால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை.
- இந்த பகுதி மக்கள் பாதிப்பு இல்லாமல் வாழ்ந்து வருகிறோம்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், வாணியம்பாடி**

திி/ள். R. புருஷோத்தமன் கல் குவாரி நிறுவனத்தின் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றதாக தெரிவித்துக்கொண்டார்.

இந்த கருத்து கேட்பு கூட்டத்தை சிறப்பாக நடத்தி கொடுத்த வருவாய் கோட்டாட்சியர் (Sub Divisional Magistrate), வாணியம்பாடி அவர்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் பொது மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொண்டார். இந்த கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் பொது மக்கள் மற்றும் பத்திரிக்கை நண்பர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

**இணைப்பு:**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)

2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் கலந்த கொண்டவர்களின் வருகை பதிவேடு நகல் (மொத்த பக்கம் 15 மற்றும் நபர்கள் 117)
3. பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்.

24/07/2025

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.

24/07/25

வருவாய் கோட்டாட்சியர்,
வாணியம்பாடி
திருப்பத்தூர் மாவட்டம்